**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 72/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | Prosecution : | **PW - 2** |
| | Defence : | |
| | Court : | |
| Name | : | முகமது ஆரிப் |
| Father / Husband Name | : | அக்பர்பாஷா |
| Village | : | 27, பூமால் ராவுத்தர் கோவில் தெரு, கீழவாசல் |
| Taluk | : | தஞ்சாவூர். |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | தனியார் வேலை |
| Age | : | 27/2021 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20 .10.2021**
**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது** திருமதி **எஸ். ஜெயந்தி**, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, **திரு. எம். செழியன், தட்டச்சர்**

**C.C No. 72 /2021 D**ate: 20.10.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் கம்பெனியில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகின்றேன். அ.சா.1 பாஹத் உசேன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 24.09.2020 அன்று காலை 10.00 மணிக்கு அ.சா.1 வகுப்பிற்காக நான் பணிபுரியும் கீழ வீதியில் உள்ள டோர் இந்தியா கம்பெனிக்கு மேலே உள்ள கம்யூட்டர் சென்டரில் வகுப்பிற்கு சென்று விட்டு மதியம் 3.00 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தை அ.சா.1 எடுக்கச் சென்றபோது காணாமல் போய் உள்ளது. அது சம்மந்தமாக அ.சா.1 கிழக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் 28.09.2020 அன்று போலீசார் எங்கள் கடை அருகே விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். போலீசார் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். மேற்படி சம்பவம் குறித்து என்னிடம் விசாரித்து சாட்சி

கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் முபாரக் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்ததார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

அ.சா.1 எனக்கு உறவினரா என்றால் அவர் எனக்கு தெரிந்த நபர், உறவினர் அல்ல. அவருடன் புகார் கொடுக்க நான் காவல் நிலையம் செல்லவில்லை. நான் கையெழுத்து செய்த பார்வை மகசரில் எழுதப்பட்ட விபரம் என்ன என்று தெரியுமா என்றால் வண்டி எங்கு நிறுத்தப்பட்டு இருந்தது என்பது பற்றி எழுதப்பட்டுள்ளதாக போலீசார் சொன்னார்கள். நான் அதில் உள்ள விபரங்களை படித்து பார்க்கவில்லை. போலீசார் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லியுள்ளவாறு எனது முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய வில்லை என்றும், நான் அ.சா.1க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C No. 72/2021** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of witness for | | Prosecution : | **PW - 3** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | முபாரக் அலி | |
| Father / Husband Name | : | ஷாஜகான் | |
| Village | : | 33, படைவெட்டி அம்மன் கோவில் தெரு, கீழவாசல் | |
| Taluk | : | தஞ்சாவூர். | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | தனியார் வேலை | |
| Age | : | 21/2021 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20 .10.2021**
**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது** திருமதி **எஸ். ஜெயந்தி**, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, **திரு. எம். செழியன்,**

**தட்டச்சர்**

**C.C No. 72 /2021 D**ate: 20.10.2021

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் கம்பெனியில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகின்றேன். அ.சா.1 பாஹுத் உசேன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 28.09.2020 அன்று மதியம் 2.00 மணிக்கு கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர், நான் பணிபுரியும் இடத்திற்கு வந்தார். அங்கு வரைபடம் வரைந்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் சம்பவ இடத்தில் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்மந்தமாக விசாரணைக்கு வந்தார்கள்.. என்னுடன் முகமது ஆரிப் என்பவர் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்ததார்கள்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

அ.சா.1 எனது நண்பர் என்றால் சரிதான். புகார்தாரருடன் நானும் இதற்கு முன்னர் சாட்சியம் அளித்த முகமது ஆரிப்பும் புகார் கொடுப்பதற்காக காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து புகார்தாரரிடமும், என்னிடமும், முகமது ஆரிப்பிடமும் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்தினை காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால், சரிதான். என்னுடன் முகமது ஆரிப்பும் காவல் நிலையத்தில் பார்வை மகசரில் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)